செ.வெ.எண்: 46 நாள்: 22.09.2016

# பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை, அரசினர் தொழிற் பயிற்சிநிலையத்தில் பிப்ரவரி 2017-ல் நடைபெறவிருக்கும் அகில இந்தியத் தொழிற் தேர்விற்கு (பருவமுறை) செய்முறைத் தேர்வு வெளித் தேர்வாளர்களை Online மூலம் MIS Portal-ல் பதிவுசெய்தவர்கள் மட்டுமே வெளித்தேர்வாளர்களாக சுழற்சி முறையில் நியமனம் செய்யப்படுவார்கள் என புதுடெல்லி, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை தலைமை இயக்குநர் அவர்களாலும் மற்றும் மதுரை மண்டலபயிற்சி இணை இயக்குநர் அவர்களாலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் கீழ்க்கண்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகிறது.

1.அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், புதுக்கோட்டை, 2.சென்ட்ரல் தொழிற்பயிற்சி நிலையம், புதுக்கோட்டை, 3.அட்வான்ஸ்டு, தொழிற்பயிற்சி நிலையம், புதுக்கோட்டை, 4. ஸ்ரீபிரகதாம்பாள் தொழிற்பயிற்சி நிலையம், புதுக்கோட்டை, 5. புனிதமேரீஸ் தொாழிற்பயிற்சி நிலையம், ஆலங்குடி, 6. புனிதஜோசப் தொழிற்பயிற்சி நிலையம், நமனசமுத்திரம், 7. புனிதஜேம்ஸ் தொழிற்பயிற்சி நிலையம், அன்னவாசல், 8. ரீஜினல் தொழிற்பயிற்சி நிலையம், ஆலங்கடி, 9. சதுரகிரி, தொழிற்பயிற்சி நிலையம், ஆலங்குடி, 10. ஏ.சி.முத்தையா, தொழிற்பயிற்சி நிலையம், கோனாபட்டு, 11. எம்.ஆர்.அருணாச்சலம், தொழிற்பயிற்சி நிலையம், ஊனையூர், 12. ஹைடெக் குட்வில் தொழிற்பயிற்சி நிலையம், கொசப்பட்டி, திருமயம், 13. எம்.பவர் தொழிற்பயிற்சி நிலையம், மண்டையூர், மேற்க்காணும் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பொருத்துநர், கடைசலர், இயந்திரவேலையாள், கம்மியர் கருவிகள், கம்மியர் மோட்டார் வண்டி, கம்பியாள், பற்றவைப்பவர், கம்மியர் டீசல், பம்ப் ஆபரேட்டர் கம் மெக்கானிக், எலெக்ட்ரிசியன், டிமேன் சிவில், எலக்ட்ரானிக் மெக்கானிக், பிளம்பர் ஆகிய தொழிற்பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.

இத்தொழிற் பிரிவுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மற்றும் ஜுலை மாதங்களில் அகில இந்தியத் தொழிற் தேர்வு செய்முறைத் தேர்வு மற்றும் எழுத்துத் தேர்வும் நடத்தப்பட்டு வருகிறது.

அகில இந்தியத் தொழிற் தேர்விற்கான செய்முறைத் தேர்வு வெளித் தேர்வாளர்களாக பணியாற்றிட கீழ்க்காணும் கல்வித் தகுதியுடைய விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் NCVT MIS Portal-ல் online மூலம் தங்களது பெயர்களை30.9.2016-க்குள் பதிவேற்றம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பதிவேற்றம் செய்யப்பட்ட நகலுடன் அதற்கான விபரத்தை புதுக்கோட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வருக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கல்வித் தகுதி: 1.ITI (NTC/NAC) CTI பயிற்சிதேர்ச்சிமற்றும் 5 வருடகாலம் அனுபவம், 2. Diploma/ Degree 2 & 3 Years Experience (Electrical / Mechanical), 3.பாலிடெக்னிக், பொறியியல்கல்லூரி, அரசு மற்றும் தனியார் துறை சார்ந்த நிறுவனங்கள், தொழில் நிறுவனம், அரசுதுறை, கார்ப்பரேசன் போன்றவற்றில் பணிபுரிபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், 4. தேவையான கல்வித் தகுதியுடைய ஓய்வு பெற்றவர்களும் வெளித்தேர்வாளராக பணியாற்றிட விருப்பம் தெரிவிக்கலாம்.

மேலும் விபரங்களுக்கு புதுக்கோட்டை, அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் அவர்களை நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொள்ளலாம். தொலைபேசிஎண். 04322-221584

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**